# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 9 Issue No. : 52 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, மார்ச் 26 - ஏப் 1, 2023, 4 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-


# “தலை தானுங்க எல்லாம்.. அடிபட்டால் என்ன செய்யனும் தெரிஞ்சுக்கோங்க..”

## விளக்குகிறார் கே.ஜி மருத்துவமனையின் தலைவர் பக்தவத்சலம்..!



✍ தி கோவை மெயில்

மனிதனின் சிந்திக்கும் திறனே இன்றையக் கண்டுபிடிப்புகளுக்கும், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கும் காரணம். இவ்வுலகில் கோடிக்கணக்கான உயிர்கள் இருந்தும் இந்த சிந்தனைக்கு சொந்தக்காரர்களான மனித இனமே இன்று தனித்து நடைபோட்டு சரித்திரங்கள் படைத்து வருகின்றது. மாற்றங்களை உருவாக்கும் ஆற்றல்களைக் கொடுக்கிறது நம் மூளை. மூளையைப்பாது காத்துக் கொள்ள தலை என்ற கவசத்தை வழங்கி நம்மைப் படைத்திருக்கிறது இந்த இயற்கை. விலை மதிப்பற்ற உயிரை இயக்கும் கருவியை நாம் நமது கருத்தில் வைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் தானே?

இந்நிலையில் தலையில் அடிபட்டால் ஏற்படும் பிரச்னைகள், மூளைச்சாவு அதனால் ஏற்படும் பின் விளைவுகள் என்ன? அடிபடும் போது நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய சிகிச்சைகள் என்ன? மூளைச்சாவு என்றால் என்ன என்பது குறித்து கே.ஜி.மருத்துவமனையின் தலைவர் டாக்டர் கே.பக்தவத்சலத்திடம் கேள்வி யெழுப்பினோம். இதுகுறித்து அவர் கூறியதாவது:

கை, கால்களில் அடிபட்டால் முதலுதவி செய்ய முடியும். ஆனால், தலையில் அடிபட்டால் நிலைமை வேறு. முதலில் தலையில் அடிபட்டவர்கள் மூச்சுவிடுகிறார்களா? என்பதைக் கவனிக்கவேண்டும். நாடித்துடிப்பு இருக்கிறதா? என்பதைக் கவனிக்க வேண்டும். நினைவு இல்லையென்றால் உடனடியாக ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும். ஆம்புலன்ஸ்சில் முதலுதவி வசதிகள்இருக்கும். அடிபட்டவருக்கு வாந்தி போன்ற பின் விளைவுகள் இருந்தால் அதனை சுத்தப்படுத்த வேண்டும், அடிபட்ட இடத்தில் ரத்தம் வெளியேறினால் அதனைத்தடுத்துக் கட்டுப்போட வேண்டும். குறிப்பாக அனைத்துத் துறை மருத்துவர்களும் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

### காதுகளில் இரத்தம்

மூளைமுன்பகுதி, பின் பகுதி மற்றும் மத்தியப் பகுதி என மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் முன்பகுதியில் அடிபடும் போது மூக்கு, கண் பகுதியிலிருந்து இரத்தம் வரலாம். இரு பகுதிகளில் அடிபட்டால் காதிலிருந்து ரத்தம் வரும். பின்பகுதியில் அடிபடும் போது சுயநினைவு இழக்க நேரிடும். கண் , காது, மூக்கு, தொண்டை, வாய்ப் பகுதிகளில் இரத்தம் வந்தால் உயிருக்கு ஆபத்து நேரிடும் வாய்ப்புகள் உள்ளன. ஆனால் தகுந்த மருத்துவமனை, சிகிச்சையால் உயிர்களைக் காக்க முடியும்.

### உச்சி முதல் பாதம் வரை

தலையில் அடிபட்டால், உச்சி முதல் பாதம் வரை அனைத்து உறுப்புகளும் நன்றாக உள்ளனவா என்பதை மருத்துவர்கள் பரிசோதனை செய்வார்கள். எலும்புகள் அடிபட்டுள்ளனவா? முதுகெலும்பு அடிபட்டுள்ளதா? என்பதையும் ஆய்வு செய்யவேண்டும். இந்த விஷயத்தில், அனுபவமிக்க மருத்துவர்களும், மருத்துவமனைகளே நல்ல சிகிச்சையைத் தர முடியும்.

மூளையில் அறுவை சிகிச்சை என்பது சவாலான ஒன்று. ஒவ்வொரு நரம்பும் பாதுகாக்கப் பட வேண்டியவை. அழுத்த மடைந்த நரம்புகள் போன்றவற்றைப் பாதுகாப்பாகக் கவனித்து செய்ய வேண்டும். ஏதேனும் கோடுகள் விழுந்தால், வலிப்பு நோய் வரலாம். ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடம் பாதிக்கப்பட்டால் பேச்சு வராமல் போகலாம். அடிபட்டதால் ஏற்படும் விளைவுகள் ஆறுமாதங்கள் முதல் ஒரு வருடத்திற்குள் தெரிய வரலாம்.

### பின் விளைவுகள்

அடிபட்டு மூளையில் ஏதாவது பாதிப்பு இருந்தால் பின்விளைவுகள் வரலாம். அதே போல்,மூளையில் தழும்புகள் ஏற்பட்ட ஒருவருக்கு வலிப்பு வரவும் வாய்ப்புள்ளது. அதற்கான மருந்துகளை எடுத்துக் கொண்டால் இதனைத் தவிர்த்துவிட முடியும். உயிரைக்காக்கவும், பாதிப்புகளைக் குறைக்கவும் தான் அறுவைசிகிச்சை மேற் கொள்ளப்படுகிறது. ஆகையால் அறுவை சிகிச்சையால் எவ்விதப் பின் விளைவுகளும் வராது.

### மயக்கம்

தலையில் அடிபட்டு வரும் ஒருவருக்கு சுய நினைவு இல்லாமல் இருக்கலாம். பக்கவாதம் ஏற்பட்டிருக்கலாம். அவருக்கு சிடிஸ்கேன் எடுத்துப் பார்க்க வேண்டும். அடிபட்ட இடத்தில் 150 மி.லி. வரை இரத்தக்கட்டிகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. மூளைக்கு மேல் இரத்தக்கட்டி ஏற்பட்டால் மூளைக்கு அழுத்தம் ஏற்பட்டு பாதிப்புகள் ஏற்படலாம். சுய நினைவற்ற நிலைக்கும் செல்ல வாய்ப்புகள் உள்ளன. உயிரிழப்புக்கும் வாய்ப்புகளும் உள்ளன. எனவே, உடனடியாக சரியான மருத்துவனைக்கு அழைத்துச் செல்லவேண்டும். இரத்தம் உறைந்தஇடத்தைத்துல்லியமாகஅறிந்து, அந்த இடத்தில் துளையிட்டு இரத்தக்கட்டியை முழுமையாக அகற்ற வேண்டும்.

தலையில் அடிபட்ட ஒருவருக்கு ஓரிரு நாட்கள் கழித்து இரத்தக்கசிவு ஏற்பட்டால் பேச்சுக்குளறுதல், தள்ளாட்டம், தலைவலி, சுய நினைவு இழக்கும் நிலை ஏற்படலாம்.இந்த பிரச்னைக்கு இரத்தக் கட்டியை உறிஞ்சி எடுத்து விட்டால், உயிரைக் காக்க முடியும்.

### மூளைச் சாவு

மூளைச்சாவு குறித்து நாம் கேள்விப் பட்டிருப்போம். மூளைச்சாவு அடைந்த ஒருவரது மூளை மட்டும் இறந்திருக்கும். உடலில் சில செயல்பாடுகள் இருக்கும். ஆனால் நினைவு இருக்காது. கண் பார்வை இருக்காது. இரத்த அழுத்தம் இருக்கும். பிற செயல்பாடுகள் இருக்காது. மூளைச்சாவு ஏற்பட்டால், அரசு அனுமதியுடன் ஒரு நாள் சிகிச்சையில் வைத்திருந்து அவரது உறுப்புகளைத் தானமாக வழங்கலாம்.

பெற்றோர், நெருங்கிய உறவினர்களின் அனுமதி இருந்தால் மட்டுமே உறுப்புதானம் வழங்கமுடியும். தானங்களில் சிறந்த தானம் உறுப்பு தானம் தான். ஒருவர் உயிரிழந்தால் அவரால் 5 முதல் 6 பேருக்கு மறுவாழ்வு அளிக்க முடியும். இறந்தவர் உடலைப் புதைத்து விடாதீர்கள். மூளைச்சாவு ஏற்பட்டவுடன் உடல் தானத்திற்கு ஒப்புதல் அளியுங்கள். தமிழ்நாட்டில் தான் உடல் உறுப்பு தானம் அதிக அளவில் செய்யப்படுகிறது. இது நல்ல முயற்சி.

> **அடிபட்டு மூளையில் ஏதாவது பாதிப்பு இருந்தால் பின் விளைவுகள் வரலாம். அதேபோல், மூளையில் தழும்புகள் ஏற்பட்ட ஒருவருக்கு வலிப்பு வரவும் வாய்ப்புள்ளது. அதற்கான மருந்துகளை எடுத்துக்கொண்டால் இதனைத் தவிர்த்து விடமுடியும். உயிரைக்காக்கவும், பாதிப்புகளைக் குறைக்கவும் தான் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. ஆகையால் அறுவை சிகிச்சையால் எவ்வித பின் விளைவுகளும் வராது.**




## நம்மை காக்கும் 48 திட்டத்தில் - இன்னுயிர் காத்திடுவோம்

**- டாக்டர் ராஜ்குமார் மூளை நரம்பியல் மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சை நிபுணர்**

தலையில் அடிபட்ட ஒருவர் எந்தஅளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளார்? பாதிக்கப்பட்டவர் அரசு காப்பீட்டுத் திட்டம் மூலமாக பயன் பெற முடியுமா என்பது குறித்து கே.ஜி.மருத்துவமனையின் மூளை நரம்பியல் மற்றும் தண்டு வட அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ராஜ்குமார் கூறியதாவது:

தலையில் அடிபடுதல் என்பதில் 5 நிலைகள் உள்ளன. அதாவது,சாதாரணகாயம், விழுந்ததும் எழுந்து விடுதல், நினைவு இழத்தல், இரத்தம் உறைந்துகசிவு, பலமான அடி ஆகியவையாகும். முதல் நான்கு வகைகளுக்கு மருத்துவச் சிகிச்சைகள் அளிக்க முடியும். உயிர் பிழைக்க வைக்க வாய்ப்புகள் உள்ளன.

லேசான காயம் என்றால் தோல் அளவில் சரி செய்து விடலாம். தலையில் உள்ள எலும்பு உடைந்திருந்தால், அந்த எலும்பை சரியாக வைத்து சிகிச்சை அளிக்க வாய்ப்புகள் உள்ளன. செயற்கை யான எலும்பை வைத்தும் குணப்படுத்தி விடலாம்.

### எப்படிக் கண்டுபிடிப்பது?

தலையில் ஏற்படும் காயம் எவ்வளவு தூரம் மூளையை பாதித்துள்ளது என்பதை எடுத்துக்காட்ட பல்வேறு வகையான கருவிகள்உள்ளன. முன்பு எக்ஸ்ரே மட்டுமே ஒரே வழியாக இருந்தது. தற்போது நவீன முன்னேற்றத்தால் சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ.,போன்றவை மிகவும் துல்லியமான சிகிச்சை அளிக்க உதவுகின்றன. எப்படியெனில், மூளையின் சரியான நிலையை அறிய சி.டி.ஸ்கேன் உதவுகிறது. மூளையில் இரத்தக் கசிவை அறிய எம்.ஆர்.ஐ.,உதவும்.

தலைகீழாக ஒருவர் விழும்போது, தலையில் மட்டுமின்றி, முதுகுத் தண்டுவடத்திலும் எலும்பு முறிவுகள் ஏற்படும். இதில், உள்ள ஏழு எலும்புகள் மடங்கினால், நரம்புகளும் பாதிக்கப்படும். இரண்டு கை,கால் முடக்கம் ஏற்படலாம். மூச்சு விடுவதும் கடினம். இத்தகைய நிலையில் உள்ளவர் 15 நாள் முதல் 30 நாள் வரை மட்டுமே உயிர் வாழ முடியும். சிகிச்சை தலையில் காயம் அடைந்து சிகிச்சை பெற்றவர்கள் வாரம் ஒரு முறையும் பின்னர் 15 நாட்களுக்கு ஒரு முறையும் பரிசோதனைக்கு வர வேண்டும். அதன் பின்னர் மாதம் ஒரு முறை வந்தால் போதுமானது. ஸ்கேன், எக்ஸ்ரே போன்றவற்றில் பிரச்னைகள் இல்லை என்றால் பரிசோதனைக்கு வரத் தேவையிருக்காது. வலிப்புகள், தழும்புகளைப் பொருத்து மறுபரிசோதனைகள் இருக்கும்.

மருத்துவமனைகளில் மேற் கொள்ளப்படும் முக்கியமான சிகிச்சைகளில் தலைக்காய சிகிச்சையும் ஒன்று. தலையில் அடிபட்ட ஒருவருக்கு சிகிச்சை வழங்க அனுபவமிக்க மருத்துவரும், சிகிச்சைக்கான கருவிகளும், அதி நவீன கருவிகளும் கொண்ட மருத்துவமனை அவசியம். இந்த வசதிகள் அனைத்தும் உள்ள மருத்துவமனையாக கே.ஜி.மருத்துவமனை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



### மெடிக்ளைம், விபத்து காப்பீடு

விபத்தினால் தலையில் அடிபட்டு வருபவர்களுக்கு கே.ஜி மருத்துவமனையில் மெடிக்ளைம் மற்றும் விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் மனிதாபிமான அடிப்படையில் குறைவான கட்டணத்தில் சிகிச்சை தருகிறோம். நம்மை காக்கும் 48 திட்டத்தில் நெடுஞ்சாலையில் அடிபட்டு சிகிச்சைக்கு வருவோருக்கு தமிழக அரசு ஒரு லட்ச ரூபாய் தருகிறது.

இதிலும் சிகிச்சை தர நாங்கள் தயார். எல்லோரும் அரசு மருத்துவமனைக்குச் செல்ல முடியும் என்பது இயலாது. நம்மைக் காக்கும் 48 மணி நேரம் என்ற திட்டத்திலும் பயன் பெறலாம். எங்களது மருத்துவமனை, வணிக ரீதியான மருத்துவமனை அல்ல. அறக்கட்டளைச் சார்ந்த மருத்துவமனை. இது,மக்களுக்காகவே சேவையாற்றி வருகிறது. இவ்வாறு மருத்துவர் ராஜ்குமார் கூறினார்


## குழந்தையை அரியவகை நோயிலிருந்து காப்பாற்றி

# கே.எம்.சி.ஹெச்.மருத்துவர்கள் சாதனை

✍ தி கோவை மெயில்

பிறந்து இரண்டரை மாதங்களே ஆன பெண் குழந்தை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் கொண்டுவரப்பட்டது. அந்தக் குழந்தைக்கு அடிக்கடி வலிப்பு வந்துள்ளது. மற்றும் ஹைபோகிளைசீமியா என்ற இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைவான நிலையும் இருந்தது. வேறு மருத்துவமனைகளில் இதற்கான காரணத்தையும் கண்டறிய முடியவில்லை, உரிய சிகிச்சையும் அளிக்க இயலவில்லை.

கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் மேற்கொண்ட பல்வேறு பரிசோதனைகள் மூலம் அந்த குழந்தைக்குப் பிறவியிலேயே கணையக் கோளாறு இருப்பது தெரியவந்தது. டாக்டர் ராஜேந்திரன் மற்றும் டாக்டர் பிரபு ஆகியோர் தலைமையில் செயல்பட்ட மருத்துவக் குழுவினர் பெட்சிடி ஸ்கேன் உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் செய்தனர். அதன் மூலம் அக்குழந்தைக்கு நெசிடியோபிளாஸ்டோசிஸ் (Nesidioblastosis) என்ற அரிய வகை நோய் இருப்பது கண்டறியப்பட்டது. அதாவது உடலுக்கு வழக்கமாகத் தேவைப்படுவதை விட அதிக அளவில் இன்சுலின் ஹார்மோனை கணையம் சுரப்பதால் இந்தநிலை ஏற்படுகிறது. இதனால் இரத்தத்தில் சர்க்கரை அளவு கடுமையாகக் குறைந்து வலிப்பு ஏற்படுகிறது. இது போன்ற நிலையில் தக்க நேரத்தில் உரிய பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் அது குழந்தையின் மூளையை பாதித்துவிடும் அல்லது உயிருக்கே ஆபத்தாய் போய்விடும்.



பெண் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்த மருத்துவ குழுவினருடன் கே.எம்.சி.ஹெச்.மருத்துமனை செயல் இயக்குநர் டாக்டர் அருண் பழனிசாமி.

மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு பல்வேறு புதிய மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அது எதிர்பார்த்த அளவு பலன் அளிக்காததானால் அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது. கணைய அறுவை சிகிச்சை நிபுணர்களான டாக்டர் பாரி விஜயராகவன் மற்றும் டாக்டர் என்.குமரன் ஆகியோர் மயக்க மருந்து நிபுணரான டாக்டர் ஹரீந்தர் சிங் உடன் இணைந்து ஓர் அரிய வகை அறுவை சிகிச்சையை மேற்கொண்டனர். கணையத்தில் சுமார் 75% சதம் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு குழந்தை உடல் நிலை நன்கு தேறியது.

தற்போது அறுவை சிகிச்சை முடிந்து இரண்டு மாதங்கள் முடிந்துள்ள நிலையில் குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் சிவானந்தம் பராமரிப்பில் அக்குழந்தை நலமாக உள்ளது.

அந்தக் குழந்தைக்கு ஏற்பட்டிருந்த அரியவகை நோய்க்கு அளிக்கப்பட வேண்டிய சிகிச்சை முறைகள் குறித்து இதுவரை எந்த அறிவியல் மருத்துவ ஆவணங்களிலும் எந்தவித வழிகாட்டுதலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அளவுக்கு அதிகமாக கணையம் அகற்றப்பட்டால் எதிர்காலத்தில் அக்குழந்தைக்கு சர்க்கரை நோய் ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளது. இதை கவனத்தில் கொண்டு கே.எம்.சி.ஹெச் மருத்துவக் குழுவினர் ஓர் நூதன முறை அறுவை சிகிச்சையால் கணையத்தில் தேவையான அளவு மட்டுமே அகற்றி சிகிச்சை அளித்துள்ளனர்.

மிகவும் திறமையாகச் செயல்பட்டு பிஞ்சுக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மருத்துவக் குழுவினரை கே.எம்.சி.ஹெச். மருத்துமனை செயல் இயக்குநர் டாக்டர் அருண் பழனிசாமி வெகுவாக பாராட்டினார். சிறப்பு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள உதவிடும் f-DOPA PET ஸ்கேன் முதலான இத்தகைய அதிநவீன மருத்துவ வசதிகளை மேற்கு மற்றும் தென் தமிழக பிராந்தியத்தில் பெற்றுள்ள ஒரே மருத்துவமனை கே.எம்.சி.ஹெச் மட்டுமே என்பதை டாக்டர் அருண் பழனி சாமி சுட்டிக்காட்டினார். அத்துடன் அதிநவீன வசதிகளுடன் கூடிய இளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு குழந்தைகள் உடல் நலம் காப்பதில் முக்கிய பங்காற்றுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான

## மருத்துவமனை திறப்பு விழா

✍ தி கோவை மெயில்

கோவை ரயில் நிலையம் அருகே உள்ள பிஎஸ்என்எல் அலுவலக வளாகத்தில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான மருத்துவமனை திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

இதில், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா காணொளி காட்சி மூலமாக மையத்தினை திறந்து வைத்தார்.

அதனை அடுத்து, சிறப்பு விருந்தினர் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், மையத்தினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர் அவர் பேசுகையில், மத்திய அரசு ஊழியர்கள் பயன் பெறும் வகையில் கோவைக்கு இந்த மையத்தினை வழங்கிய மத்திய அரசுக்கு நன்றி. ஆயுர்வேதம், யுனானி சிகிச்சைகளை அளிக்கும் வகையிலான மருத்துவ மையங்களையும் கோவைக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும், இந்நிகழ்வில் கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன் காணொளி காட்சி மூலமாகப் பங்கேற்றார். மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மகாராஜனைப்போல் வாழ்ந்தவர் மகாலிங்கம்

- பட்டிமன்றப் பேச்சாளர் சுகிசிவம் பேச்சு

✍ தி கோவை மெயில்

சக்தி குழும நிறுவனங்களின் தலைவர் அமரர் அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களின் நூற்றாண்டு விழா, டாக்டர் மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், சக்தி குழும நிறுவனங்களின் தலைவர் ம.மாணிக்கம் வரவேற்புரை வழங்கினார். பாரதிய வித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர் தலைமையுரை வழங்கினார்.

தொடர்ந்து, புத்தகங்கள் வெளியிடும் நிகழ்வு நடைபெற்றது. அதில், வள்ளலாரைக் குறித்து மகாலிங்கம் அவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து, "வாழ்விற்கு வந்த வள்ளலார்" என்ற புத்தகத்தை பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர் வெளியிட, என்.ஐ.ஏ (NIA) கல்வி நிறுவனங்களின் துணைத்தலைவர் மா.பாலசுப்ரமணியம் பெற்றுக்கொண்டார்.

தினமணி துணை ஆசிரியர் வா.மு.முரளியின், இந்திய நாட்டின் 120 விஞ்ஞானிகளை அறிமுகம் செய்கிற நூலான "அக்கினிக் குஞ்சுகள்" தொகுதி-3 என்ற புத்தகத்தை பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் வெளியிட, முதல் பிரதியை சாமுண்டீஸ்வரி சர்க்கரை ஆலையின் நிர்வாக இயக்குநர் எம்.ஸ்ரீனிவாசன் பெற்றுக்கொண்டார். கலில் ஜிப்ரான் எழுதிய பேரிலக்கிய நூலைத் தமிழில்



நூற்றாண்டு விழாவில் பேசுகிறார் சிறப்பு விருந்தினர் சுகிசிவம்.

மொழி பெயர்த்த கவிஞர் சிற்பி அவர்களின் "மனித குமாரன் இயேசு" என்ற புத்தகத்தை பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் வெளியிட, முதல் பிரதியை குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியின் இணைத் தாளாளர் சங்கர் வானவராயர் பெற்றுக்கொண்டார்.

பின்னர், அருட்செல்வர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஓம் சக்தி மாத இதழில் பொதுமக்களுக்காக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் தலைவர் ம.மாணிக்கம் பரிசுகளை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர் பட்டிமன்றப் பேச்சாளர் சொல் வேந்தர் சுகிசிவம் பேசுகையில், டாக்டர் மகாலிங்கம் அவர்கள் ஜனக மகாராஜனைப் போல் வாழ்ந்தார். கருணையும் தேச பக்தியும் அவரை மக்கள் மனதில் நிலைத்திருக்கும் மனிதனாக மாற்றியிருந்தது. அவரின் உள்ளார்ந்த தலைமைப் பண்புகள் அவர் புகழை ஓங்கச் செய்யும் என்றும் அவரின் வாழ்க்கையிலிருந்து பல்வேறு நிகழ்வுகளை எடுத்துரைத்து புகழாரம் சூட்டினார்.

விழாவில், மகாலிங்கம் அவர்களின் குடும்பத்தினர், பண்ணாரி அம்மன் கல்வி நிறுவனங்களின் தலைவர் எஸ்.வி.பாலசுப்ரமணியம், என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் செயலர் சி.ராமசாமி, தாளாளர் ஹரிஹரசுதன், கல்லூரியின் டீன்ஸ், முதல்வர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் என்.ஐ.ஏ. பள்ளிகளின் கல்வி அலுவலர்கள், தலைமை ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர்.

# என்.ஜி.பி. மழலையர் பள்ளி ஆண்டு விழா



கோவை, என்.ஜி.பி. மழலையர் பள்ளி ஆண்டு விழா மற்றும் மேல் மழலையர் பள்ளியில் பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் கே.எம்.சி.எச். மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் இராஜேந்திரன், மாணவர்களின் சிறப்பான வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் செயல்படும் பள்ளியைப் பாராட்டினார். பின்னர், என்.ஜி.பி. கல்விக்குழும நிறுவனர் நல்ல ஜி பழனிசாமி, தாளாளர் தவமணி தேவிபழனிசாமி ஆகியோர் பட்டமளிப்பு சான்றிதழ்களை வழங்கினார். குழந்தைகள் பட்டமளிப்பு அங்கி மற்றும் தொப்பிகளை அணிந்து மேடைக்கு வந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

# உலகின் பசிப்பிணியை நாம் ஏன் இன்னும் போக்கவில்லை?

✍ தி கோவை மெயில்

கேள்வி : சத்குரு, என் அன்பை வெளிப்படுத்திக் கொள்கிறேன். என் கேள்வி என்னவென்றால், பல்வேறு உணவு மற்றும் வேளாண் நிறுவனங்களிலும், விவசாய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களிலும் கோடிக் கணக்கில் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தாலும், பசிப்பிணியை நம்மால் முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை. இது எனக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்னைக்கு ஆன்மீக அறிவியல் தீர்வு தரமுடியுமா? இந்த இடைவெளியைக் கடக்க ஆன்மீகம் உதவுமா?


**சத்குரு :** பூமியில் பலர் பசியுடனும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையுடனும் இருப்பது, போதுமான உணவு இல்லாத காரணத்தால் அல்ல. 760 கோடி மக்களுக்குத் தேவையான உணவை விட அதிகமான உணவு நம்மிடம் இருக்கும் போதும், 81.5 கோடி மக்கள் உணவின்றி அவதிப்படுகின்றனர். இது விவசாயத்தின் தோல்வியால் அல்ல, மனித இதயத்தின் தோல்வியிது.

நீங்கள் அன்பு என்ற சொல்லைப் பயன்படுத்தினீர்கள். உங்கள் உணர்ச்சிப் பெருக்கை என்மீது திருப்புவதற்கு பதிலாக நான் நன்றாகவே இருக்கிறேன் இந்த உலகம் நோக்கி இதைச்செலுத்தினால், உங்கள் அன்பைக் கொண்டு என்ன செய்ய முடியும் என்று பார்ப்போம். அன்பு செயலில் வெளிப்பட்டால், இந்த 81.5 கோடி மக்கள் பசியால் வாடமாட்டார்கள். உலகில் உணவுப் பற்றாக்குறையாக இருந்திருந்தால் அதுவேறு விஷயம். ஆனால் தேவைக்கு அதிகமாக உணவு இருக்கும் போதும் மக்கள் பசியாறாமல் இருப்பது மனிதகுலத்தின் தோல்வி, விவசாயத்தின் தோல்வியல்ல.

தற்போது விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருளை அவர்களிடம் இரட்டிப்பாக்கச் சொன்னால், இரண்டே வருடங்களில் செய்துவிடுவார்கள். ஆனால் உண்ண உணவின்றி இருக்கும் மக்களிடம் அதை எடுத்துச் செல்வது எப்படி? இதுதான் மிகப்பெரிய கேள்வி, இடையே சந்தைகள் உள்ளன, இதனால் பாதிக்கப்படும் சுயநலவாதிகள் இருக்கின்றனர், இதற்குத் தடையாக சில தேசங்களும் நிற்கக்கூடும்.

ஒரு முறை நான் உலகப் பொருளாதார மாநாட்டில் இருந்த போது, அதில் கலந்துகொண்ட தலைவர்கள் நான் பேசியதை பல சொற்பொழிவுகளில் கேட்டனர். பின்பு அவர்கள் என்னிடம் வந்து, "சத்குரு, உலகில் மாற்றம் ஏற்படுத்த நாங்கள் செய்யக் கூடிய ஒரு விஷயம் இருந்தால், அது என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "நான் 25 பேரின் பெயர்களை உங்களுக்குச் சொல்கிறேன், அவர்களை 5 நாட்கள் எனக்குக் கொடுங்கள். இரண்டு மூன்று வருடங்களில் பூமியில் மிகப்பெரிய மாற்றத்தைக் காண்பீர்கள்"என்றேன்.

அவர்கள், "யார் அந்த 25 பேர்?" என்று கேட்டனர். நான் உலகின் 25 முக்கிய நாடுகளின் தலைவர்கள் பெயரைச் சொன்னேன். "இவர்களை என்னிடம் 5 நாட்களுக்குக் கொடுங்கள். சராசரி



மனிதர்களுக்கு 2 - 3 நாட்களில் இதை என்னால் செய்யமுடியும். ஆனால் இவர்கள் அரசியல் வாதிகளாக இருப்பதால் எனக்கு 5 நாட்கள் தேவைப்படுகிறது. 5 நாட்களுக்கு அவர்களை என்னிடம் விட்டுவிடுங்கள். 2 - 3 வருடத்தில் உலகம் மாற்றமடைந்த இடமாக இருக்கும்" என்றேன்.

### ஒரே கேள்வி

பூமியில் உள்ள 25 நாட்டுத் தலைவர்கள் மனதில் உறுதியேற்றால், அனைவரும் தேவையான அளவு உண்ணும் விதமாக நாம் செய்ய முடியும். அப்போது ஒவ்வொரு குழந்தையும் நிரம்பிய வயிறுடன் உறங்கச் செல்லும். இதைச் செய்ய பல ஆண்டுகள் தேவையில்லை, இரண்டே ஆண்டுகள் போதும். உணவு, தொழில்நுட்பம், போக்குவரத்து என வசதிகள் அனைத்தும் உள்ளன. மனித குலத்தின் சரித்திரத்தில் முன்பு எப்போதும் இவை அனைத்தும் இருந்ததில்லை.

25 வருடங்களுக்கு முன்பு கூட இது சாத்தியமாக இருந்ததில்லை. ஆனால் இன்று முதல்முறையாக நம்மிடம் எல்லாமே இருக்கிறது, மனிதர்களிடத்தில் விருப்பம் மட்டுமே இல்லாதிருக்கிறது. விருப்பமுடையவர்களாய் மாற எவ்வளவு காலம் தேவை? என்னுடைய ஒரே கேள்வி, ஒரு தலை முறையாக நீங்களும் நானும் இதை நிகழ்த்தப் போகிறோமா, இல்லை வீட்டில் அமர்ந்தபடி புலம்பப் போகிறோமா? இது பற்றி குறை சொல்லி அழுதிட மட்டுமே செய்வோமா, அல்லது எழுந்து நின்று நம்மால் இயன்ற விதங்களில் இதனை நிகழச்செய்வோமா? இதுதான் கேள்வி.

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்டரிங்

THE COVAI MAIL

SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

Coimbatore | Chennai | Tiruppur | Ooty | Coonoor | Kotagiri | Pollachi | Palani

Vol No. : 9 Issue No. : 52 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | Every Sunday, March 26 - April 1, 2023, 4 Pages, Rs.5/- | Annual subscription - Rs.260/-

# கொசுத்தொல்லை, தாங்கல!

✍ **ஆசிரியர்,** தி கோவை மெயில்

சில நேரங்களில் பெரிய, பெரியகாரியங்களை எளிதாக செய்து விடுவோம். சின்ன விஷயங்களை செய்ய முடியாது. அது மாதிரி ஒரு காரியம்தான்... கட்டுக்கடங்காமல் பெருகிவரும் கொசுக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதும் என்று தற்போதைய நிலைமை ஆகிவிட்டது.

மிகப்பெரும்பாலும் நகரமயமாகிவிட்ட தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் கொசுக்களால் ஏற்படும் பாதிப்புகள் நாளுக்கு நாள் ஏராளமாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. டெங்கு காய்ச்சல் தொடங்கி பல்வேறு நோய்கள் பரவுவதற்கு கொசுக்கள்தான் காரணம் என்று மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. ஒரு காலத்தில் கொசுக்களால் மலேரியா காய்ச்சல் பரவியபோது, அன்று மருந்தில்லாத காரணத்தால், பல ஆயிரக்கணக்கான பேர் உலகம் முழுவதும் இறந்தது வரலாற்றில் பதிவாகி இருக்கிறது. ஆனால் நல்ல மருத்துவ முன்னேற்றம் உள்ள தற்போதைய நிலையிலும் கொசுக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறி வருகிறோம்.

கொசுவும் ஒரு உயிரினம் தானே என்று சிலர் வாதிடலாம். அது பல உயிர்களும் இணைந்து வாழும் வனப்பகுதியில்தான் செல்லுபடி ஆகும். வனத்தில் மான்கள் அதிகமானால் அதைக் கட்டுப்படுத்த அங்கு புலி இருக்கும். அதைப்போலவே நீர் நிலைகளில் கொசுக்களைக் கட்டுப்படுத்த அதனை உண்ணும் மீன்வகைகள் இருக்கும்.

ஆனால் இங்கே நகரப் பகுதியில் புதைசாக்கடை எனும் மூடப்பட்ட சாக்கடைக் குழி அல்லது குழாய் போன்ற பகுதிகளில் கோடிக் கணக்கில் கொசுக்கள் வாடகை தராமல் குடியிருக்கின்றன. எவ்விதத் தடையும் இல்லாமல் அவை பல்கிப்பெருகுகின்றன. வாய்ப்பு கிடைத்து, வெளியே வரும் பொழுது கிடைப்பவற்றையெல்லாம் கடித்து குதறுகின்றன.


நகரத்தை ஒட்டிய பெரும் நீர்நிலைகளான ஏரி, குளம் போன்றவை சாக்கடை தொட்டிகளாக மாறி வரும் நிலையில், அவைத் கொசுக்களின் சொந்த நாடாக எளிதில் மாறுகின்றன.

இது போக, நகரநாகரிகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் ஓட்டை உடைசல், பழைய கைவிடப்பட்ட பொருட்கள், குறிப்பாக டயர் போன்ற நீர் தேங்கும் வாய்ப்புள்ள பொருட்கள், வீடுகளில் உள்ள பழைய மாடல் கைவிடப்பட்ட ஆட்டுக்கல் போன்றவை கொசுக்களின் உற்பத்தி மையமாக விளங்குகின்றன.

முன்பெல்லாம் பஞ் சாயத்து, நகராட்சி, மாநகராட்சி ஊழியர்கள் இந்தக் கொசு ஒழிப்புப் பணியை செய்து வந்தது போல தற்போது பார்க்க முடியவில்லை. அவ்வப்போது ஸ்நேக் பாபு கொசு மருந்து அடிப்பது போலத்தான் கொசு ஒழிப்புப் பணிகளைக் காண முடிகிறது. ஆனால் இதற்கு உள்ளாட்சி அமைப்புகளை மட்டுமே குறை சொல்லிப் பயன் இல்லை. அவர்கள் கவனிக்க வேண்டிய பணிகள் ஏராளம். பணியாளர்களோ குறைவு. வசதிகளும் குறைவு. இது தொடர்ந்து நீடிக்கிறது.

இந்த சூழலில்தான் மக்கள் தாங்கள் கடைபிடிக்க வேண்டிய முறைகளைப் பொறுப்புடன் செய்தால் இந்த கொசுத் தொல்லைக்கு ஓரளவு முடிவு கட்ட முடியும். தங்களது வீடுகளில் உள்ள ஓட்டை உடைசல்களை நினைவுச் சின்னமாக போற்றிப் பாதுகாக்காமல் உடனடியாக டிஸ்போஸ் செய்யவேண்டும். சாக்கடை என்பது கழிவுநீர் ஓடுவதற்கு என்பதை உணர்ந்து பிளாஸ்டிக் போன்ற குப்பைகளைப் போட்டு, சாக்கடையில் அணை கட்டுவதைத் தவிர்க்க வேண்டும். காலி மனைகளில் உள்ள குழிகள், பாட்டில்கள் போன்றவற்றில் நீர் நிறைந்து கொசுக்கள் பெருகுவதைத் தடுக்க வேண்டும். கழிவு நீர் மேலாண்மையைச் சிறப்பாக செய்து கழிவுப் பொருட்கள் நீர் நிலை போன்ற இடங்களில் சென்று கலப்பதைத் தடுக்க வேண்டும். பழைய பொருட்கள் வாங்கி இருப்பில் வைத்து தொழில் செய்வோர், தங்கள் திறந்தவெளி குடோனுக்குள் நீர்தேங்கி அதில் கொசு பெருகுவதைத் தடுக்க வேண்டும். முன்பு போல கொசுவுக்கு எதிரியான உயிரினங்களை வளர்த்தெடுத்து உயிரியல் முறையில் கட்டுப்படுத்த வேண்டும்.

> **மாநகராட்சி ஊழியர்கள் இந்தக் கொசு ஒழிப்புப் பணியை முன்பு செய்து வந்தது போல தற்போது பார்க்க முடியவில்லை. அவ்வப்போது ஸ்நேக் பாபு கொசு மருந்து அடிப்பது போலத்தான் கொசு ஒழிப்புப் பணிகளைக் காண முடிகிறது.**



இவ்வாறு அனைவரும் ஒருங்கிணைந்து பணியைச் செய்தால் மட்டுமே இந்த கொசுக்களைக் கட்டுக்குள் கொண்டு வரமுடியும். மாறாக இது சாதாரண கொசு என்று எண்ணிக் கொண்டிருந்தால் கொசுவால் பரவும் நோய்களால் பாதித்து இறக்கின்ற குழந்தைகளின் மரணத்துக்கு நாமும் ஒரு மறைமுகமான காரணமாக ஆவோம்!

CENTENARY CELEBRATIONS
CELEBRATING THE INSPIRING LIFE OF ARUTCHELVAR DR.N.MAHALINGAM AYYA



To walk the path of righteousness, it takes courage and conviction, not power or position. For the ultimate goal, the only goal, of all our endeavours, is to do good to the society.
Arutchelvar
**Dr.N.Mahalingam**

NM 100
1923 - 2014

I have known Dr. NM for the past many years as a great visionary. He has made a significant contribution in nation building. His dream, his life, his work, in the field of industry, education and literature is indeed a great contribution to the nation.
Bharat Ratna
**Dr. A.P.J. Abdul Kalam**

**Centenary Address : 'Sollin Selvar' Suki Sivam Avargal**
Tuesday | 21 March 2023 | 4:00 PM - 7:00 PM | Nachimuthu Polytechnic College Campus, Pollachi

ABT Limited | ABT Industries Limited | NIA Transports | Sakthi Sugars Limited | Sakthi Finance Limited | Sakthi Soyas
Sri Chamundeswari Sugars Limited | Sakthi Auto Components Limited
N. Mahalingam & Co. | Anamallais Engineering | Sakthi Coffee Estates Pvt. Limited | ARC Retreading Company (P) Limited
Mahalingam Mariammal Manivizha Charitable Trust Institutions
Dr. Mahalingam College of Engineering & Technology

SAKTHI GROUP

Nachimuthu Polytechnic College | NGM College | Dr. Mahalingam Paramedical College | Kumaraguru College of Technology | Sakthi Polytechnic College | Kumaraguru Institute of Agriculture | Sri Cham Sugar Education Society | Kumaraguru College of Liberal Arts and Science | Vanavarayar Institute of Agriculture | NIA Schools
Sakthi Institute of Information and Management Studies
Nachimuthu Gounder Rukmaniammal Higher Secondary School

# SKCET hosted G20 Young Ambassador Summit 2023

✍ The Covai Mail

Sri Krishna College of Engineering and Technology, Coimbatore hosted the G20 Young Ambassador Summit 2023 on Monday with the theme 'Fuelling the Future of Global Youth'. R.N.Ravi, Governor of Tamil Nadu was the Chief Guest, Murugan, Union Minister of State for Information and Broadcasting, and Amitabh Kant, G20 Sherpa - Government of India were the Guests of Honor.

Malarvizhi, Chairperson, Managing Trustee, and Adithya, Trustee of Sri Krishna Institutions inaugurated the function. The Governor was felicitated by the Chairperson and he honoured the Panelists. Academicians, and students from various Educational Institutions took part in this event.

Malarvizhi said, "The students should use this opportunity to represent the voice of global youth and advocate their dreams, needs and aspirations".

"The world is facing many challenges like climate change, poverty, destruction of biodiversity, food and undernourishment, health and India can offer a ray of hope to address many of these issues", added Murugan



*The Governor R.N. Ravi honouring the Gautami Tadimalla, Indian Actress BJYM Vice President*

**Youth are Leaders in Making Present - Gov. R.N. Ravi**

Governor of Tamil Nadu R.N.Ravi remarked all the youth, especially the ones took part in the summit were not future leaders but leaders in the making at present. Hence, they all have to play significant roles to make their future better, starting today.

"The G20 is a powerful group. It has far more potential to transform than other bodies in the world," Governor R.N.Ravi said.

**Vasudhaiva Kutumbakam**

He highlighted the Vasudhaiva Kutumbakam *(meaning The World is One Family)* system that India has created and deployed on itself."

He mentioned that the Indian Government policies under PM Modi were rolled out for the entire nation's development. Prior to this regime, India had just 500 startups. Whereas now, the number has reched nearly 1,00,000.

**India's Massive Digital Transformation**

G20 Sherpa of India, Amitabh Kant shared the massive transformation that the India had under PM Modi in the last 9 years. Between the years 2015-17, 500 million bank accounts were created.

**Indian model needs to be taken to the world - Amitabh Kant**

"Meanwhile, there are 4 billion people around the world who don't have a digital identity, 2.5 billion people do not have bank accounts, 135 countries don't have fast payment facilities, and therefore they will have great difficulty to have digital education, digital agriculture, and digital health. Hence the Indian model needs to be taken to the world", he opined.

Later, a panel discussion was held under the theme "Blended Education for all using Digital Technology" and "Women's Empowerment and Entrepreneurship" by eminent speakers. The Valedictory function was graced by Gautami Tadimalla, Indian Actress. Janet, Principal, SKCET proposed a vote of thanks. More than 1200 students from various institutions participated in this summit.

## Vi launched 'Self-KYC' process

✍ The Covai Mail

Vi's industry-first Self-KYC process is based on DoT mandated guidelines and enables customers to access a new connection anytime from anywhere with the added advantage of SIM delivery at the doorstep.

Users can complete the Vi Self KYC process by visiting Vi website and selecting a desired plan and number of choice and placing order, through OTP authentication on the alternate mobile number. Follow simple steps on Self-KYC, which includes Aadhaar authentication on UIDAI site.

The user then needs to capture a live photo and live video of minimum 10 seconds.

Once the order is placed and digital verification is complete, the customer will receive SIM card at the doorstep, post successful OTP authentication.

## A Fashion Show held at Prozone Mall



✍ The Covai Mail

As part of the International Women's Day celebration, "Wow Wonder Woman"- A women's fashion show was held at Prozone Mall, Coimbatore on Monday.

It was organized in association with Indian Flower Company. Kids aged 10 to 15 participated and walked in their costumes. College students and corporate employees between the ages of 16 and 26 followed. Housewives and entrepreneurs between the ages of 26 and 40+ participated and showcased their skills. Prizes and certificates were awarded to the first-place winners.

The Chief Manager (Finance & Administration) of Prozone Mall, Babu, Head of Operations, Musamil, Head of Marketing Division, Brigston Nathan, Head of Operations and Marketing Division, Murali organised the event.



## NGPITECH signed MOU with Anuswaryaa Enterprises



***The Department of Management Studies of Dr. N.G.P Institute of Technology signed a Memorandum of Understanding (MOU) with Anuswaryaa Enterprises Pvt Ltd, Coimbatore. Thavamani D Palaniswami, Secretary of the college and Rtn. Sudhakar, founder and Managing Director, Anuswaryaa Enterprise Private limited signed the MOU in the presence of Prabha, Principal and Muthuswamy, Director Academics of the Institutions. This MOU was organized by Padmapriya, Assistant Professor, MBA.***

## Axis Mutual Fund launched a New Fund Offer

✍ The Covai Mail

Axis Mutual Fund, one among the fastest growing fund houses in India, announced the launch of their New Fund Offer - "Axis S&P 500 ETF Fund of Fund" (an open ended fund of fund investing in Exchange Traded Funds replicating S&P 500 TRI, subject to tracking errors). The new fund will adhere to the S&P 500 TRI (INR) benchmark. Vinayak Jayanath would be managing the fund and the minimum investment amount is Rs. 500 and in multiples of Re. 1/- thereafter. The exit load is if redeemed/switched-out within 30 Days from the date of allotment is 0.25%.

This Fund endeavours to invest at least 95% of the net assets in units/shares of overseas Exchange Traded Funds replicating S&P 500 TRI, subject to the availability of Eligible Investment Amount and the remaining in Debt and Money Market investments. The mutual fund structure, investors can look to invest through various systematic options like SIPs, STP's & lumpsum investments. The NFO opened for subscription from March 22, 2023 to April 05, 2023.

## KASC organized Millets Conclave



*The chief guests releasing 10Rs. Millets Snacks packets*

✍ The Covai Mail

The year 2023 has been declared by the United Nations as the "International Year of the Millet". Hence, Millet's Conclave entitled "Native millets for sustainable health" was organized by the Department of Biochemistry in association with Tamil millets, Coimbatore sponsored by Indian Science Congress Association (ISCA), Coimbatore Chapter on Wednesday at Kongunadu Arts and Science College (KASC), Coimbatore. As a part of this program millets-based stalls of various brands like Anil, Idhyam, Jeeni, etc., has been exhibited at the college campus.

Paulsamy, R&D Dean and Convenor, ISCA, Coimbatore Chapter, inaugurated the program. Dr Aruna, MBBS, DPH Deputy Director of Health services Coimbatore HUB, Dr. Nalayini, Principal Scientist, ICAR-Central Institute of Cotton Research (CICR) and Rtn. Sundar, MBA, Sales and marketing Architect-FMCS, Food industry, Founder and CEO of Millet Foundation and TanMillet's, Coimbatore were the Keynote speakers.

The chief guests released Rs.10. millets snacks packets and the samples were distributed among the students.

## SIMA lauds Special Schemes in State Budget 2023-24


✍ The Covai Mail

The Textile industry is the second largest employment provider in the Nation, next only to agriculture. Chief Minister of Tamilnadu, M.K.Stalin took several policy initiatives for fuelling the growth of textile industry.

In a Press Release, Ravi Sam, Chairman, The Southern India Mills' Association (SIMA) thanked the Chief Minister and Minister for Handlooms & Textiles, Gandhi and Minister for Industries, Thangam Thennarasu for the right initiatives. He has appreciated the Government for enhancing the free power supply to the power-loom sector from 750 units to 1000 units.

The Chairman welcomed the announcement of 10 mini handloom parks with a total outlay of Rs.20Crores to upgrade the standard of handloom products by using latest technologies and creating market linkages. He embraced the announcement of new SIPCOT industrial parks in the clusters of Virudhunagar, Vellore, Kallakurichi, and Coimbatore at an estimated cost of Rs.410Crores for providing employment opportunities to nearly 22,000 persons.

He appreciated the announcement of Rs.25Crores allocated for "Factory Skill Schools" programme and the state-of-the-art Skill Development Centre to be established at an estimated cost of Rs.80Crores, in SIPCOT Industrial Park in Krishnagiri district, which is emerging as the third largest industrial cluster in the State.



*Ravi Sam, Chairman, The Southern India Mills' Association (SIMA)*

"The announcement regarding the establishment of a Start-up Mission to address the difficulties faced by women entrepreneurs will encourage them in all aspects of their business", said Ravi Sam.

## HMD Global Launched Nokia C12 Pro

✍ The Covai Mail

HMD Global, the home of Nokia phones announced the new Nokia C12 Pro, an addition to the Nokia C12 series, on Tuesday. It brings elevated performance with Octa Core Processor, streamlined OS and enhanced imaging with Night and Portrait modes for both 8MP Rear & 5MP Front camera with stunning 6.3" HD+ display with 12 months Replacement Guarantee.

Nokia C12 Pro is available in India at retail stores, leading E-commerce websites and Nokia.com, from Tuesday in Light Mint, Charcoal & Dark Cyan colours. It comes in 4/64GB (2GB RAM + 2GB Virtual RAM) and 5/64GB (3GB RAM + 2GB Virtual RAM) memory variants, priced at INR 6999 and INR 7499 respectively.

## PSG ITECH organized Technical Symposium



*PSG student teaching various college students in a workshop*

✍ The Covai Mail

PSG ITECH organized The National Level Technical Symposium "YUKTA: A Technical Voyage 2K23" on 20th & 21st March 2023. The Chief Guest was Ramachandran, COO-Propel Industries (Title Sponsor yukta: 2k23). On the first day there were 12 Workshops, 12 Technical Events and 10 Non-Technical events held. The next day 14 Workshops, 9 Technical Events and 6 Non- Technical Events were held. Also, events like iTech Radio Society Interaction, Classical Dance and Music Performance by Adithya, Super Singer and Vrusha Balu and Team, etc., took place.

Auto drive a leap into autonomous driving(mechanical department), Differential GPS (civil department), Machine learning and its applications (ECE department), AI and beyond: Exploring the frontier of Deep learning (CSE Department) and Introduction to matlab and EV modelling using matlab were some of the topics of the Workshop.

Cadathon (civil department), CAD Design (mechanical department), Decode the DaVinci code(CSE department), Paper presentation-Eventila(ECE Department) and paper presentation(EEE department) were some of the technical events and Bhoom Shaka and Treasure hunt were the Non-Technical events held. Totally, 548 Colleges were registered and more than 2000 students were participated.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan